People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 19.07.2009 முதல் 31.07.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 289. | 19.07.09 | **திருவள்ளூர் மாவட்டம் :** ஆந்திராவுக்க கடத்த முயன்ற 8 டன் ரேசன் அரிசியை போலீசார் கைப்பற்றினர். | அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| 290. | 19.07.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** பரமக்குடி, வசந்தபுரத்தைச் சேர்ந்த போஸ் மகள் இராஜலெட்சுமியை அவரது கணவர் அண்ணாதுரை வரதட்சனை கேட்டு சித்திரவதை செய்துள்ளார். இது பற்றி இராஜலெட்சுமி போலீசில் புகார் செய்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அண்ணாதுரை அவரது சகோதரி மற்றும் அண்ணன் மனைவி, இராஜலெட்சுமியை மிரட்டியுள்ளனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 291. | 19.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** ஆத்தூர் ஒன்றியம், சின்னாளபட்டி அருகே உள்ள ஜே. புதுக்கோட்டை அங்கன்வாடி மையத்தில் மேற்கூறைகள் இல்லாததால் குழந்தைகள் வெயிலில் அமர்ந்திருக்கும் நிலை. இது பற்றி வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உயர் அதிகாரிகளிடம் இது குறித்து புகார் செய்தும் நடவடிக்கை இல்லை. | பள்ளிக்கூட வன்முறை | தமிழ்சுடர் |
| 292. | 19.07.09 | **சிவகங்கை மாவட்டம் :** காளையார் கோவிலை சேர்ந்த ஆரோக்கியசாமி காளையார் கோவிலில் ரூ.50 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வங்கி மேலாளரையும், நகை மதிப்பீட்டாளரையும் சி.பி.ஐ போலீசார் கைது செய்தனர். | லஞ்ச ஊழல் | தமிழ்சுடர் |
| 293. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** எழுமலை எருமார்பட்டி பகுதியைச் சேர்ந்த சின்னச்சாமி மனைவி அமுதா வீட்டில் தனியாக தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது அப்பகுதியை சேர்ந்த பாண்டி என்பவர் அமுதாவை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்ச்சி. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 294. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** பழங்காநத்தம், மாடக்குளம் பகுதியைச் சேர்ந்த கண்ணன் மகள் உதயசூரியாவை (17/09) கண்ணன் உறவினர் செந்தில் குமார் பெண் கேட்டுள்ளார். ஆனால் கண்ணன் இப்போதைக்கு வேண்டாம் உதயசூரியா படிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இந்நிலையில் மாணவி உதயசூரியாவை செந்தில்குமார் கடத்தியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 295. | 19.07.08 | **கோவை மாவட்டம் :** பீளமேட்டில் உள்ள தனியார் கலைக்கல்லூரியில் முதலாமாண்டு மாணவரை ராக்கிங் செய்ததாக மூன்றாமாண்டு | ராக்கிங் கொடுமை | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாணவர்கள் 5பேர் மீது போலீசார் வழக்கு பதிவு. | | |
| 296. | 19.07.09 | **விழுப்புரம் மாவட்டம் :** கண்டாச்சிபுரம் அருகே வி. புதுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேசன் மனைவி யாகவள்ளி. வெங்கடேசன் வீரசோழபுரம் கிராமத்தில் உள்ள செங்கல் சூளையில் ரூ. 20,000 முன்பணம் பெற்றுள்ளார். இது தொடர்பாக வெங்கடேசனுக்கும் யாகவள்ளிக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த வெங்கடேசன் யாகவள்ளியை சுவரில் தள்ளி கொலை செய்துள்ளார். அச்சுதாவையும் வெங்கடேசன் கொலை செய்துள்ளார். இதுபற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 297. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** வாடிப்பட்டி அருகே குட்லாடம்பட்டியை சேர்ந்த பரமாண்டி மகள் பகவதி (17/09). பகவதியை அப்பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் காதலித்துள்ளார். பலமுறை ராஜேந்திரன் பகவதியுடன் உடலுறவு கொண்டுள்ளார். பகவதி, ராஜேந்திரனிடம் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தியுள்ளார். ஆனால் ராஜேந்திரன் திருமணம் செய்ய மறுப்பு. இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 298. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** முனிச்சாலையை சேர்ந்த முத்துராமலிங்கம் மகள் தமிழரசி, எஸ். எஸ் காலனியைச் சேர்ந்த பிரேம்குமாரைக் காதலித்து பெற்றோர் எதிர்ப்பை மீறி திருமணம் செய்து கொண்டுள்ளனர். ஆனால் பிரேம்குமார் தந்தை சுப்பையா சமாதானப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வந்து தமிழரசியை மிரட்டி பதிவு திருமணத்தை ரத்து செய்து கொள்வதாக மிரட்டி எபதி வாங்கிக் கொண்டார். இதைப் பற்றி தமிழரசி போலீசில் புகார் செய்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்தவார்தமிழரசியை மில்லில் அடைத்து வைத்து சித்திரவதை செய்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 299. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** மேலூர் – விமலா. விமலா என்ற பெண் தனது காதலனான மணிகண்டனை (மினி பஸ் ஓட்டுனர்) நம்பி சென்ற போது காதலனும் அவருடைய நண்பர்களும் சேர்ந்து விமலாவை பாலியல் பலாத்காரம் செய்தனர். பின்பு விமலாவை ரயில்வே மேம்பாலத்தில் தள்ளிவிட்டு ஓடிவிட்டனர். பொதுமக்கள் விமலாவை காப்பாற்றி சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தனர். திடீர் நகர் போலீசார் வழக்கு பதிவு செய்து மணிகண்டனை கைது செய்தனர். | பாலியல் பலாத்காரம் | தமிழ் முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| 300. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** திருமங்கலத்தை சேர்ந்தவர் பூமிநாதன் – மனைவி நாகலட்சுமி. பூமிநாதனின் உறவினர் மகன் முத்து. இவருக்கும் நாகலட்சுமியின் தோழி லலிதாவிற்கும் காதல். இதை முத்துவின் அண்ன் பால்பாண்டிக்கு பிடிக்கவில்லை. எனவே நாகலட்சமியிடம் சென்று பேசினார். ஆனால் முத்துவும் லலிதாவும் திருமணம் செய்து கொண்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த பால்பாண்டி நாகலட்சுமியிடம் சென்று சத்தம் போட்டார். எனவே மனமுடைந்த நாகலட்சுமி மண்ணெண்ணை ஊற்றி தீக்குளித்து இறந்தார். திருமங்களலம் டவுண் போலீசார் பால்பாண்டி பேரில் வழக்குப் பதிவு. | | தமிழ்முரசு |
| 301. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி அருகே உள்ள எ. ராமநாதபுரத்தை சேர்ந்தவர் முத்துராமன் மனைவி லட்சக்கொடி. இவர் மீது லோகராஜீக்கு தீராத ஆசை. எனவே முத்துராமன் இல்லாத நேரத்தில் லட்சக்கொடியை கற்பழிக்க முயற்சி செய்தார். உசிலம்பட்டி போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர் வசந்தி வழக்குப் பதிவு செய்து லோகராஜை கைது செய்தார். | பாலியல் பலாத்காரம் | மாலை மலர் |
| 302. | 19.07.09 | **சிவகங்கை மாவட்டம் :** காளையார் கோவில் ஆரோக்கியசாமி பல தொழில்களை வைத்து நடத்தி வருபவர். தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய கடனுதவிக்காக காதி கிராப்ட் நிறுவனத்தை அனுகும் போது அவர்கள் தேசிய மய வங்கிக்கு பரிந்துரை செய்தனர். வங்கி மேலாளர் 10 லட்சம் கடனுக்கு 1 லட்சம் லஞ்சம் என கேட்டுள்ளனர். எனவே ஆரோக்கியசாமி சி.பி.ஐ சூப்பிரண்டு தெரிவித்து பணம் கொடுக்கும் போது கையும் களவுமாக பிடித்தனர். வங்கி மேலாளர் நாகராஜனையும் நகை மதிப்பீட்டாளர் சந்திரனையும் | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 303. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** பழங்காநத்தம், மாடக்குளம் கண்ணனின் மகள் பள்ளிக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை. இவரை பழங்காநத்தம் தண்டல்காரன் பட்டியைச் சேர்ந்த காளிமுத்து அவரது மனைவி மற்றும் மகள் கடத்திச் சென்றதாக கண்ணன் ஜெய்ஹிந்துபுரம் காவல்துறையில் வழக்கு கொடுத்தார். அதன்படி காளிமுத்து சாந்தி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். | மாணவி கடத்தல் | தினத்தந்தி |
| 304. | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** கீழமாத்தூர், காமாட்சிபுரம் வைகை ஆற்றுப் பகுதியில் மணல் திருட்டு. மதுரை அருகே கீழமாத்தூர், காமாட்சிபுரம் ஊராட்சிக்குள் இரவு 10 மணிக்கு | மணல் கடத்தல் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேல் அரைபாடி லாரிகள் மூலம் மணல் திருட்டு நடக்கிறது. மணல் அள்ள லாரிகள் செல்லும் பாதையில் குடிநீர் குழாய்கள் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் குழாய்கள் உடைந்து தண்ணீர் வீணாவதால் குடிநீர் சப்ளை பாதிக்கப்படுகிறது. | | |
| **305.** | 19.07.09 | **நெல்லை மாவட்டம் :** நெல்லை மாநகராட்சி, கே.டி.சி நகர் பகுதியில் 2006–ல் துணைமுதல்வர் துவக்கி வைத்த தாமிரபரணி குடிநீர் திட்டத்தில் கே.டி.சி. நகர் பகுதியில் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய குடிநீர் இணைப்பு வரியும், பாதாள சாக்கடை பரியும் முறையாக செலுத்தாமல் இணைப்பு பெற்றுள்ளனர். இதில் ஆளுங்கட்சியின் தலையீடு அதிகமாக உள்ளதால் யாரும் புகார் செய்யவில்லை. தற்பொழுது முன்னாள் கவுன்சிலரின் புகாரால் அதில் விசாரணை நடைபெறுகிறது. | பொது மக்களின் புகார் மனு | தினமலர் |
| **306.** | 19.07.09 | **ராமநாதபுரம் மாவட்டம் :** 100 ஆண்டுகளாக தடுப்புச் சுவராகவும், தளமாகவும் கல்லறைகளைக் கொண்டு ஒரு பள்ளி சிறப்பாக செயல்படுகிறது. ராமநாதபுரம் வடக்குத் தெருவில் சி.எஸ்.ஐ தொடக்கப்பள்ளி உள்ளது. இந்தப் பள்ளி கல்லறைகளை சுவறாகவும், தடுப்பாகவும் கொண்டு செயல்படுகிறது. குழந்தைகள் கல்லறை என்ற பயம் இல்லாமல் நன்றாகப் படிக்கின்றனர். தற்பொழுது எந்த விதமான கல்லறையும் இங்கு எழுப்பப்படுவதில்லை. | | தினமலர் |
| **307.** | 19.07.09 | **மதுரை மாவட்டம் :** மணமேல்குடி அருகே மைனர் பெண்ணை கடத்தி திருமணம். இன்ஸ்பெக்டருக்கு ஐகோர்ட் உத்தரவு. மணமேல்குடியைச் சேர்ந்தவர் மும்தாஜ்பேகம். இவரது கணவர் துபாயில் தையல்காரராக உள்ளார். இவர்களது மகள் பெனாசிர் (17) வெளியில் சென்றவரை பள்ளத்தூர் ஊராட்சி தலைவர் தனபால் மற்றும் பழனியப்பன் உதவியுடன் பிரபாகரன் கடத்தி திருமணம் செய்து வைன்ன முயற்சி செய்தது தெரியவந்தது. மும்தாஜ் பேகம் மீட்டு ஆஜர்படுத்துமாறு மனு செய்தார். நீதிபதிகள் போலீசாரிடம் பெண்ணை கண்டுபிடித்து ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டனர். | மைனர் பெண் கடத்தல் | தினமலர் |
| **308.** | 20.07.09 | **தூத்துக்குடி மாவட்டம் :** தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ரெங்கன் மகன் செந்தில் என்பவர் ஹோட்டலில் சாப்பிடும் பொழுது ஏற்பட்ட வாக்குவாதத்தினால் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விதிமுறைகளை மீறி தாழ்த்தப்பட்ட | மிரட்டும் காவல்துறை | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமுதாயத்தை சேர்ந்தவரான இவரை கடுமையாக தாக்கினார். ஜாமீன் வாங்கி வந்து போலீசார் தாக்கியதால் ஏற்பட்ட காயத்தை போக்குவதற்கு தூத்துக்குடி கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டால் அதனால் போலீசாரால் டாக்டர்களிடம் செந்திலை ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறும்படி மிரட்டினர். | | |
| **309.** | 20.07.09 | **மதுரை மாவட்டம் :** மதுரை முனிச்சாலை ரோடு இஸ்மாயில்புரத்தைச் சேர்ந்தவர் முத்துராமலிங்கம். இவரது மகள் தமிழரசி. தமிழரசி என்பர் படிக்கும் பொழுத எஸ்.எஸ். காலனியை சேர்ந்த வாலிபர் ரஞ்சித்தை திருமணம் முடித்து பெங்களூரில் வசித்தனர். ரஞ்சித் பெற்றோரின் எதிர்ப்பினால் திருமணம் முடித்து தனியாக வசித்தனர். ரஞ்சித்தின் தந்தை சுப்பையா கோபமடைந்தார். சுப்பையா தனியாக வசித்து வந்த தம்பதியை தன் வீட்டிற்கு அழைத்து வந்து தனியாக பிரித்து சித்திரவதைப் படுத்தியதாக கூறப்படுகிறது. தமிழரசி வாழாந்தூரில் உள்ள ஒரு வீட்டில் அடைக்கப்பட்டார். தமிழரசி தப்பி வந்து ரஞ்சித்தின் தந்தை சுப்பையா, தாய் ஜெயராணி ஆகியோர் மீது புகார் பண்ணினர். | காதல் திருமணம் செய்த பெண் சித்திரவதை | தமிழ்சுடர் |
| **310.** | 20.07.09 | **மதுரை மாவட்டம் :** சமயநல்லூர் சரகம், பரவை காந்தி ஜீ வீதியைச் சேர்ந்தவர் அழகு. இவரது மகள் லட்சுமண தேவி. இவருக்கும், இருதயராஜ் என்பவருக்கும் திருமணம் நடத்தி வைத்தார். திருமணமான ஒரு மாதத்திலேயே வரதட்சணை பணம் குறைவா இருக்கு, உன் தந்தையிடம் வாங்கி வா என்று இருதயராஜ் துன்புறுத்தியுள்ளார். மனம் உடைந்த லட்சுமணதேவி அனைவரும் தூங்கிய நேரத்தில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். | வரதட்சனை கொடுமை | தமிழ்சுடர் |
| **311.** | 20.07.09 | **மதுரை மாவட்டம் :** மதுரை அருகே மேலூரைச் சேர்ந்தவர் விமலா கடல்புதூரைச் சேர்ந்தவர் மணிகண்டன். இருவருக்கும் பஸ்ஸில் செல்லும்போது பழக்கம் ஏற்பட்டு காதலாக மாறியது. மணிகண்டன், விமலாவை வண்டியூர் பூங்காவுக்கு அழைத்துச் சென்று தன்னுடைய மூன்று நண்பர்களுடன் சேர்ந்து பாலியல் பலாத்காரம் செய்து, விமலாவை டு வீலரில் தூக்கி வந்து ரயில்வே மேம்பாலத்திலிருந்து கீழே தள்ளிவிட்டுள்ளனர். | பாலியல் பலாத்காரம் | |
| **312.** | 20.07.09 | **மதுரை மாவட்டம் :** திருமங்கலம் நகரம், சுந்தர கொத்தன் சந்து பகுதியைச் சேர்ந்தவர் பூமிநாதன். இவரது மனைவி நாகலெட்சுமி. நாகலெட்சுமியின் தோழி லலிதா. | அவதூறாக திட்டியதால் தற்கொலை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாகலெட்சுமியின் கணவர் பூமிநாதனின் உறவினர் முத்து. லலிதாவும், முத்துவும் காதல் செய்தனர். இதை லலிதாவின் அண்ணன் பால்பாண்டி கண்டித்ததோடு, நாகலெட்சுமியைக் கண்டித்தார். ஒருநாள் இருவரும் திருமணம் முடித்தனர் இதைக் கேள்விப்பட்டு பால்பாண்டி நாகலெட்சுமியை தரக்குறைவாக பேசியுள்ளார். இதனால் மனமுடைந்த நாகலெட்சுமி தற்கொலை செய்துகொண்டார். இதனால் பூமிநாதன் போலீசில் புகார் செய்துள்ளார். | | |
| **313.** | 20.07.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி ஏ. ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர் முத்துராமன். இவரது மனைவி லட்சக்கொடி. லட்சக்கொடி வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தார். அப்போது அதே ஊரைச் சேர்ந்த மோகன்ராஜா தவறாக நடக்க முயற்சி செய்துள்ளார். லட்சக்கொடி சத்தம் போடவே மோகன்ராஜா தப்பி ஓடிவிட்டார். புகாரின்பேரில் மோகன்ராஜாவை கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **314.** | 20.07.09 | **தஞ்சாவூர் மாவட்டம் :** தஞ்சாவூர் மாவட்டம். திருவையாறு தொகுதி எம்.எல்.ஏ துரை சந்திர சேகரன் ஒருவழிப் பாதையில் சென்றார். திருவையாறு தொகுதி எம்.எல். ஏ துரை சந்திரசேகரன் காரில் ஒரு வழிப் பாதையில் சென்றதால் தடுத்து நிருத்திய போலீஸ்காரரை எம்.எல்.ஏ மற்றும் அவரது ஆதரவாளர் ஒருவர் போலீசை அடித்துவிட்டுச் சென்றார். இது எஸ்.பி செந்தில் வேலனுக்கு தெரிந்தது. அவர் அந்த போலீஸ்காரருக்கு எம்.எல்.ஏ என்று தெரிந்தும் நிறுத்தியதற்காக ரொக்கப்பரிசு வழங்கினார். | | தினமலர் |
| **315.** | 21.07.09 | **விருதுநகர் மாவட்டம் :** சிவகாசியை அடுத்த நமஸ்கரித்தான்பட்டியில் உள்ள பட்டாசு ஆலையில் 9பேர் உடல் கருகி பலியானார்கள். 30 பேர் படுகாயம் அடைந்தனர். | பட்டாசு ஆலை வெடி விபத்து | தினத்தந்தி |
| **316.** | 21.07.09 | **மதுரை மாவட்டம் :** திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியனுக்க உட்பட்ட அனுப்பானடியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மனைவி தனலெட்சுமி. இவருக்கு 2 பெண் குழந்தைகள் உள்ள நிலையில் இவர் அரசின் பெண் குழந்தைகள் திட்டத்தின் சேமிப்பு பத்திரம் வழங்க சமூக நலத்துறையை நாடிய போது விரிவாக்க அலுவலர் தமிழரசி ரூ. 300 லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| **317.** | 21.07.09 | **மதுரை மாவட்டம் :** தெப்பக்குளம் போலீஸ் நிலையத்தில் தலைமை காவலர் ஆனந்த். இவர் நேற்று முன்தினம் முனிச்சாலை சோதனை சாவடியில் குடிபோதையில் பணியில் | காவலர் ஒழுங்கின்மை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்துள்ளார். இதனால் அனந்த் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். | | |
| 318. | 21.07.09 | **சென்னை மாவட்டம் :** அசோக் நகரில் உள்ள இந்திய குடியுரிமை பாதுகாப்பு அலுவலக அதிகாரி ஆர். சேகர். இவர் மீது பல்வேறுபட்ட லஞ்ச புகார்கள் உள்ள நிலையில், சேகர் மகள் இன்ஜினியர்ஸ் இடத்திற்கு ரூ. 13 லட்சம் லஞ்சம் கொடுக்க முயன்றபோது பிடிபட்டார். இவரது வீடு, அலுவலகங்களில் நடத்தப்பட்ட சோதனையில் 1 1/2 கோடி சிக்கியுள்ளது. | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 319. | 21.07.09 | **மதுரை மாவட்டம் :** பேரையூர் அருகே சின்னாளபட்டியை சேர்ந்த பால்பாண்டி மனைவி ஜெயலட்சுமி. இவர் வீட்டில் தனியாக தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது அப்பகுதியைச் சேர்ந்த இது பற்றி போலீசில் புகார். வழக்குப் பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 320. | 21.07.09 | **மதுரை மாவட்டம் :** சக்கிமங்கலம் அருகே உள்ள இளமனூரைச் சேர்ந்த நம்பிராஜ் மகள் மதனதேவி. இவரை அப்பகுதியைச் சேர்ந்த மணிக்காளை காதலித்து திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி கர்ப்பமாக்கி விட்டு தற்பொழுது திருமணம் செய்ய மறுப்பு. போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 321. | 21.07.09 | **மதுரை மாவட்டம் :** திருமங்கலம் அருகே உலகாணியைச் சேர்ந்த சுந்தரம் மனைவி அமராவதி. அமராவதிக்கு சொந்தமான இடத்தில் அப்பகுதியை சேர்ந்த ராஜா மற்றும் மனைவி பரமாயி விறகு வெட்டினர். இது பற்றி அமராவதி எதிர்த்து கேட்டபோது இருவரும் சேர்ந்து அமராவதியை தாக்கியுள்ளனர். இது பற்றி கூடக்கோயில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து 10 மாதங்கள் ஆகியும் எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் அமராவதி கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளார். | காவலர் வன்முறை | தினகரன் |
| 322. | 21.07.09 | **சிவகங்கை மாவட்டம் :** காரைக்குடி, தந்தை பெரியார் நகர், வாழ்க வளமுடன் தெருவில் வசித்து வரும் ராஜேஸ்வரி. இவரை அவரது கணவர் கண்ணப்பன் மற்றும் குடும்பத்தார் வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்துள்ளனர். இது பற்றி ராஜேஸ்வரி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 323. | 21.07.09 | **சிவகங்கை மாவட்டம் :** காரைக்குடி இந்திரா நகரைச் சேர்ந்த சிவானந்தம் மனைவி உமா மகேஷ்வரி. இவரை கணவர் குடும்பத்தினர் சித்திரவதை செய்ததாக போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 324. | 21.07.09 | **சென்னை மாவட்டம் :** வியாசர்பாடி, எம்.பி.கே நகரைச் சேர்ந்த லெட்சுமி. இவர் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | The Indian Express |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவரை அப்பகுதியை சேர்ந்த திரு என்பவருடன் காதல் ஏற்பட்டது. இந்நிலையில் திரு திருமணம் செய்துகொள்வதாக கூறி பாலியல் உறவு கொண்டுள்ளார். தற்பொழுது லெட்சமி திருமணம் செய்து கொள்ளுமாறு கூறியதால் லெட்சுமியை கொலை செய்ய முயற்சி. | | |
| **325.** | 22.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** கூட்டுறவு நகர் காலனியைச் சேர்ந்த சீனிவாசன் (40) 2வது மனைவி பிளோமினாள். குடும்பத் தகராறு காரணமாக மனமுடைந்து காணப்பட்டார். இதனால் பழச்சாற்றில் விஷம் கலந்து மகன் சூர்யா (06/09), மகள் துர்கா (15/09) உடன் குடித்தார். இதில் சூர்யா மற்றும் துர்கா உயிரிழந்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் பிலோமினாள் மருத்துவமனையில் அனுமதி. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **326.** | 22.07.09 | **மதுரை மாவட்டம் :** ஜெய்ஹிந்த்புரம், மீனாம்பாள் நகர், நெந்தில். அந்தப் பகுதியில் உள்ள குமாரிடம் ரூ.5 ஆயிரம் கடன் வாங்கி மாதம் ரூ. 350 வட்டி செலுத்தியுள்ளார். கடந்த மாதம் வட்டி செலுத்த முடியாத நிலையில் குமார் மோசமாக திட்டியதால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **327.** | 22.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** பாறையூரைச் சேர்ந்த கருப்பசாமி (35) சிறைக்கைதி. சிறுமியைப் பலாத்காரம் செய்த வழக்கில் 10 ஆண்டு சிறைத் தண்டனை பெற்றவர். உடன் கைதியிடம் கடன் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்த முடியாத நிலையில் கடன் கொடுத்தவர் திட்டியதால் மன உளைச்சலில் தற்கொலைக்கு முயற்சி. | தற்கொலை முயற்சி | தினகரன் |
| **328.** | 22.07.09 | **சிவகங்கை மாவட்டம் :** காரைக்குடி, இந்திரா நகர் சிவானந்தம் மனைவி உமா மகேஷ்வரி. இவரை சிவானந்தம் மற்றும் உறவினர்கள் கொடுமைப்படுத்தியதாக வழக்கு கொடுத்ததன் பேரில் சிவானந்தம் மற்றும் உறவினர்கள் கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| **329.** | 22.07.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி அருகே உள்ள ராமநாதபுரம் முத்துராமன் மனைவி லட்சக்கொடி. அதே உரைச் சேர்ந்த குண்டுமணி மகன் லோகராஜ் சுவர் ஏறிக் குதித்து லட்சக்கொடியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி செய்துள்ளார். அதை குறித்து வழக்கு பதிவு செய்து லோகராஜ் கைது. | பாலியல் பலாத்கார முயற்சி | தமிழ்சுடர் |
| **330.** | 22.07.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி அருகே உள்ள சிலம்பட்டி புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன் கூலி விவசாயி. இவரது மனைவி பாண்டியம்மாள். அதே ஊரில் பெட்டிக்கடை நடத்தி வருகிறார். குடும்ப | தீக்குளித்து பெண் சாவு | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சண்டை காரணமாக வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தீக்குளித்தார். இது குறித்து உசிலம்பட்டி காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | | |
| 331. | 22.07.09 | **விழுப்புரம் மாவட்டம் :** செஞ்சி தாலுகா, பொன்னங்குப்பத்தை சேர்ந்தவர் மணிகண்டன். சிலப்பட்டா மாற்றம் செய்ய அனந்தபுரம் கிராமம் நிர்வாக அலுவலர் ஜெகன்நாதன் ரூ. 2500 கையூட்டு தருமாறு கேட்டார். அதனை கொடுக்கும் நேரத்தில் லஞ்ச ஒழிப்பு காவல்துறை ஜெகன்நாதனை கைது செய்தனர். | லஞ்சம் வாங்கிய வி.ஏ.ஓ கைது | தினமலர் |
| 332. | 22.07.09 | **சென்னை மாவட்டம் :** அசோக் நகர் வீட்டு வசதி வாரிய கட்டடத்தில் வெளிநாட்டில் குடிபெயர்வோர் அலுவலகம் உள்ளது. இதன் தலைமை அதிகாரி சேகர் சென்னை மேற்கு மாம்பலம் பிருந்தாவனன்தெருவில் வசித்து வருகிறார். மகனுக்கு பொறியியல் படிப்புக்கு இடம் வாங்க 12 லட்சம் கையூட்டு கொடுக்கும் போது லஞ்ச ஒழிப்பு போலீஸ் கைது செய்து விசாரணை. இதில் அன்வர் உசேன், ரவீந்திர பாபு அடங்குவர். | லஞ்சப் புகார் | தினமலர் |
| 333. | 22.07.09 | **போடி :** டொம்புச்சேரி ஊராட்சி, நாகமலையம்மன் குளம். தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் குறைந்த கூலி தந்தைதையொட்டி மக்கள் போராட்டம் செய்ததில் தி.மு.க கவுன்சிலரின் அராஜகத்தால் பெண்ணுக்கு அடி உதை. | கூலி குறைப்பை எதிர்த்துப் போராட்டம் | தீக்கதிர் |
| 334. | 22.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** நிலக்கோட்டை அருகேயுள்ள அணைப்பட்டியில் உள்ள கல்வியியல் கல்லூரியில் சத்யா, பிரமிளா அதிகார கட்டணத்தால் சேர முடியாத நிலை. நிர்ணயிக்கப்பட்ட கட்டணத் தொகையை விட அதிகமாக வசூலிக்கின்ற நிலை எல்லா கல்லூரிகளிலும் இதே நிலை. தலித் மாணவர்களுக்கும் அரசின் உதவித் தொகை கொடுக்கவில்லை. லேப், லைப்ரரி, விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில் அதற்கான கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. | அதிக கட்டணம் வசூல் | தீக்கதிர் |
| 335. | 22.07.09 | **மதுரை மாவட்டம் :** டிபிகே ரோட்டை சேர்ந்த அன்னலட்சுமி. இவர் வீட்டில் பில்லி சூனியத்தை சரி செய்வதாக கூறி ரூ. 25 லட்சம் மற்றும் 65 பவுன் தங்க நகையை சாமியார் சூசைமுத்து மீது போலீசில் புகார். | போலி சாமியார் | தினத்தந்தி |
| 336. | 23.07.09 | **திருப்பூர் மாவட்டம் :** பல்லடம் தாலுகா, கணபதி பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட, பெத்தாம்பாளையம் கள்ளிமேடு வீட்டுமனைப் பட்டா பெற்று ஏழு ஆண்டுகள் ஆகியும் ஒதுக்கப்பட்ட இடத்தில் குடியேற முடியாமல் 153 அருந்ததியர் குடும்பத்தினர் ஏழாண்டுகளுக்கு | தீண்டாமை வன்கொடுமை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலாக தத்தளித்து வருகின்றனர். | | |
| 337. | 23.07.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி அருகே கோடாங்கிநாயக்கன்பட்டியைச் சேர்ந்த செல்வம்–பாண்டியம்மாள் மகள் ஸ்ரீதேவி. இவரது பெற்றோர் இறந்து விட்டதால் உறவினர் சேகர் வளர்த்து வந்துள்ளார். இவரை நாடகோட்டையை சோர்ந்த முருகபாண்டியனடன் திருமணம் நடத்தி வைத்துள்ளார். திருமணம் முடிந்த 1 1/2 வருடத்தில் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு ஸ்ரீதேவியுடன் வாழ மறுத்துவிட்டார். இதனால் டி.எஸ்.பி அலுவலகத்தில் விவாகரத்து ஒப்புக்கொண்டனர். டி.எஸ்.பி அலுவலகத்திலிருந்து வெளியே வந்தவர்களை முருகபாண்டி அரிவாளால் சேகர் மற்றும் உறவினர்களை வெட்டியுள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 338. | 23.07.09 | **புதுக்கோட்டை மாவட்டம் :** பொன்னமராவதி அடுத்த கொன்னையன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வேலு மகன் குப்புசாமி. குப்புசாமிக்கு புதுக்கோட்டை, சிவகங்கை, திருச்சி, திண்டுக்கல் மாவட்டங்களில் எட்டு பெண்களை பாலியல் பலாத்காரம் செய்த பின் கொலை செய்து அவர்கள் அணிந்திருந்த நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 339. | 23.07.09 | **சென்னை மாவட்டம் :** அயனாவரத்தில் வசிக்கும் ராஜன். இவர் தனது வீட்டுக்கு மின் இணைப்பு கொடுக்க ரூ. 4,500 லஞ்சம் கேட்டதாக மின் வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் வணிகப்பிரிவு குமார் (எ) பழனிக்குமார் மீது போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 340. | 23.07.09 | **மதுரை மாவட்டம் :** மேலூர் அருகே அலங்கப்பட்டியைச் சேர்ந்த தவமணி மகன் கணேசன். இவருக்கும் பஞ்சு என்பவருக்கும் 2006ஆம் ஆண்டு திருமணம் முடிந்த நிலையில் குடும்பத் தகராறு காரணமாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இது பற்றி பஞ்சு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். இதனால் கணேசனை போலீசார் விசாரணைக்கு அழைத்துச் சென்று அடித்துச் சித்திரவதை செய்ததுடன் பணம் கேட்டுள்ளார். கணேசன் மருத்துவமனையில் அனுமதி. | காவல் நிலைய வன்முறை / பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 341. | 23.07.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி அருகே புதுப்பட்டியைச் சேர்ந்த தெய்வேந்திரன் மனைவி பாண்டியம்மாள். தெய்வேந்திரனுக்கு குடிப்பழக்கம் இருந்துள்ளது. இதனால் தெய்வேந்திரனுக்கம், பாண்டியம்மாவுக்கும் | பெண்களுக்கு எதிரான வன்மறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடையே ஏற்பட்ட தகராறில் மணமுடைந்த பாண்டியம்மாள் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | | |
| 342. | 23.07.09 | **மதுரை மாவட்டம் :** தெற்கு வாசல் இன்ஸ்பெக்டர் தலைமையில் போலீசார் சோதனையில் இருந்தபோது அப்பகுதியைச் சேர்ந்த கண்ணபிரான், அப்பகுதியில் சென்ற மாணவிகளை கேலி கிண்டல் செய்துள்ளார். இதனால் போலீசார் கைது செய்துள்ளனர். | ஈவ் டீசிங் | தினகரன் |
| 343. | 23.07.09 | **மதுரை மாவட்டம் :** கீரைத்துறை சாராயக்கடை சந்து பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் மனைவி முத்துலெட்சுமி. இவர் அப்பகுதியைச் சேர்ந்த கார்த்திக் என்பவருக்கு பணம் கொடுத்திருந்தார். ஆனால் கார்த்திக் வட்டியும், அசலும் தராமல் ஏமாற்றி வந்தார். இது பற்றி முத்து லெட்சுமி தட்டிக் கேட்ட போது இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகறாரில் மத்துலெட்சுமியை கார்த்திக் அவரது நண்பர்கள் தாக்கியுள்ளனர். இது பற்றி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 344. | 24.07.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி அருகே உள்ள பூதிப்புரம் மேற்கு தெரு காலனியைசச்சேர்ந்த பெரியமாயன் (எ) பெருமாள் பெருமாள் இவரது மருமகனுடன் அப்பகுதியை சேர்நத தங்கமணி என்பவர் பேசிக்கொண்டிருந்தார் இதை பெருமாள் பேசக்கூடாது என்று கூறியுள்ளார் இதனால் ஆத்திரமடைந்த தங்கமணி பெரமாளை கம்பால் தாக்கினார். பெருமாள் உயிரிழந்தார் இது பற்றி போலிசார் புகார் வழக்கு பதிவு | | தினத்தந்தி |
| 345. | 24.07.09 | **மதுரை மாவட்டம் :** கரிமேடு போலிஸ் நிலையத்தில் குற்றபரிரிவினை தலைமை ஏட்டு சையது பாபு மற்றும் சூபி . சையது பாபு மற்றும் சுபாமணி பள்ளியில் குடிபோதையில் இருந்துள்ளனர். மேலும் அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் சென்றவர்களிடம் பணம் வசூலித்ததாக புகார் | காவலர் வன்முறை | தினத்தந்தி |
| 346. | 24.07.09 | **திருச்சி மாவட்டம் :** லால்குடியை அடுத்த சிறுகாலதுறை சேர்ந்த அறிவழகன் மகள் பவாராணி (17) பவராணியை அப்பகுதியை சேர்ந்த கமலேஷ் என்பவர் கடத்தி சென்று விட்டதாக அறிவழகன் போலிசார் புகார் செய்தும் நடவடிக்கை இல்லை இது பற்றி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 347. | 24.07.09 | **மதுரை மாவட்டம் :** கருப்பாயூரணி சேர்ந்த நல்லுச்சாமி மகள் வீரலெட்சுமி (10/09) செல்லையா மகள் ராதா (10/09) வீரலெட்சுமி மற்றும் ராதா இவரும் ஒரே பள்ளியில் படித்து வந்தனர். இருவரும் நெருங்கிய தோழிகளாவர். கடந்த ஒருமாதமாக இருவரும் ஒழுங்காக | பள்ளி குழந்தைகள் தற்கொலை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | படிக்கவில்லை மேலும் வகுப்புகளுக்கு சேல்லாமல் உறவினர் வீட்டிலேயே சுற்றிவந்தனர். இது பற்றி பெற்றோர் கண்டித்ததால் மணமுடைந்தவர்கள் தீக்குளித்தனர். இவற்றில் படுகாயமடைந்த வர்கள அரசு மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டனர் இதில் சிகிச்சை பலனினின்றி வீரலெட்சுமி ஒயிரிழநதார் போலிசர் வழக்கு பதிவு | | |
| 348. | 24.07.09 | **மதுரை மாவட்டம் :** மீனாம்பிகை நகரை சேர்நத பெணண்முத்துபாண்டி முதது பாண்டியின் தந்தை சில் ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார். ஹிதனால் தாய் அப்பகுதியை சேர்நத காஜா என்பவறை தீருமணம் செய்து கொண்டார்.இதனால் முத்துபாண்டி தங்கைகளுடன் பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தனர். இன் நிலையில் காஜாவின் மகன் சிக்கந்தர் திருட்டு சம்பவத்தில் போலிசார் விசாரித்தனர் ஆனால் போலிசார் சிக்கந்தர் திருடிய நகையை முத்துபாண்டியிடம் கொடுத்தாக போலிசார் விசாரனை என்ற பெயரில் சித்திரவதை செய்து வந்துள்ளனர். மேலும் முத்து பாாண்டியிடம் இருந்து 8பவுன் நகை மற்றும் ரூ25ஆயிரத்தை போலிசார் பரித்து சென்றுள்ளனர். | காவலர் வண்முறை | தினத்தந்தி |
| 349. | 24.07.09 | **விழுப்புரம் மாவட்டம் :** உளுந்தூர் பேட்டை அருகே உள்ள அரசனூர் கிராமத்தில் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையின் ஒரத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் பக்திநாராயனன். பக்திநாராயனன் பள்ளி முடிந்து வீட்டிற்க்கு செல்லும் போது பின்னால் வந்த கார் தலைலமை ஆசிரியரை மோதியதில் பலத்த காயமடைந்தவரை புதுச்சேரி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். ஹிதனால் ஆத்திரமடைந்த மாணவ–மாணவிகள் சாலை மறியலில் ஏுடுப்பட்டனர் இதை போலிசார் தடியடி நடத்தி கலைத்தனர். | சாலை மறியல் | தினத்தந்தி |
| 350. | 24.07.09 | **தேனி மாவட்டம் :** அரண்மனைப்புதூர், ஊராட்சியில் தேசிய ஊரகக்வேலை உறுதியளிப்பு ஊழியர்கள் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின கீழ் தினக்கூலி ரூ60 வழங்கியதை கண்டீத்து அரண்மனைப்புதூரில் பெண்கள் பஸ் மறியலில் ஈடுபட்டனர். | பஸ் மறியல் | தீக்கதிர் |
| 351. | 24.07.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** வத்தலக்குண்டு அருகில் உள்ள சென்ராயப் பெருமாள் கோயிலில் உள்ள மலைவாழ மக்கள் தேனி மாவட்டம் பெரியகுளம் அருகில் உள்ள | | தமிழ் சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாமரைக்குளம் பகுதியைச் சேர்ந்த இரு பிரிவினருக்கும் இடையே ஏற்பட்ட சேர்ந்தமோதலில் ஈடுபட்டனர். இது பற்றி போலிசார் புகார் செய்ய சென்றவர்கள் மீதே வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தனர். போலிசார் இதனால் அக்கிராம மக்கள் சென்றாயப் பெருமாள் கோயிலில் தஞ்சம் அடைந்துள்ளனர். | | |
| **352.** | 24.07.09 | **மதுரை மாவட்டம் :** வக்கீல் கோயில் பிச்சை உடல் ஊனமுற்றவர் இவர் அரசு தாழ்தள பேருந்தில் ஏறியுள்ளார். ஹிவர் தனது பாஸை கன்டக்டரிடம் காட்டியுள்ளார். ஆனால் இந்த பாஸ் செல்லாது பணம் கேட்டு டிரைவர் கன்டக்டர் கோயில் பிச்சையை தாக்கியுள்ளார். ஹிதனால் நீதிமன்ற வழகத்தில் வக்கீல்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். | சாலை மறியல் | |
| **353.** | 25.07.09 | **சிவகங்கை மாவட்டம் :** தேவக்கோட்டை தாலுகா அனுக்கனேந்தலை சேர்ந்த மாணிக்கமம்மகன் முருகன். முருகன் தனது தந்தை பெயரில் உள்ளநிலப்பட்டாவை தனது பெயரில் மாற்றுவதற்காக பூசலாங்குடி குருப் கிராம நிர்வாக அலுவலர் சோலையை அனுகின்றனர். பட்டாமாற்றுவதற்க்கு மொத்தம் ரூ7 ஆயிரம் லஞ்சம் தருமாறு கேட்டுள்ளனார். இது பற்றி போலிசார் புகார். | லஞ்ச புகார் | தினகரன் |
| **354.** | 25.07.09 | **சென்னை மாவட்டம் :** வாழப்பாடி அருகே கொழஞ்சிபட்டியை சேர்ந்த ராஜீ மனைவி மாதுரிதேவி. மாதுரி தேவி அப்பகுதியை சேர்ந்த முருகேசனிடம் வீட்டுபத்தரம் அடமானத்தின் பேரில் ரூ25 ஆயிரம் கடன் வாங்கியுள்ளார் வட்டியும் அசலும் கொடுத்து முடித்தும் முருகேசன் வீட்டு பத்திரம் தராமல் இருந்ததால் இருவருக்கிடையே தகராறு ஏற்பட்டதால் மாதூரி தேவியை முருகேசன் தாக்கியுள்ளார். இது பற்றி போலிசார் புகார் | | தினகரன் |
